2012 அக்டோபர் 29] [பேரவைத் தலைவர்]

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உருவாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்–ஒழுங்கைப் பராமரிப்பது, குற்ற நிகழ்வுகளைக் கண்டுபிடிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, போக்குவரத்தை சீர்படுத்துவது, இயற்கை இடர்பாடுகளின்போது மீட்புப் பணிகளை மேற்கொள்வது, விழாக் காலங்களில் ஏற்படும் கூட்ட நெரிசல்களை முறைப்படுத்துவது என பல்வேறு இன்றியமையாப் பணிகளை தமிழகக் காவல் துறை ஆற்றி வருகிறது.

முற்பகல் 10–05

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த காவல் துறையில் உள்ள மொத்தப் பணியிடங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 629 ஆகும். இது, 635 மக்களுக்கு ஒரு காவல் அலுவலர் என்ற விகிதாச்சாரத்தில் அமைந்துள்ளது. 1–1–2012 நிலவரப்படி, இந்த அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுக்கு எதிராக 82 விழுக்காடு காவல் அலுவலர்கள் மட்டுமே பணியில் இருந்து வருகிறார்கள்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 அக்டோபர் 29

காவல் துறையில் நிலவும் இந்தப் பற்றாக்குறையினைச் சீர்செய்யும் வகையில், காலியாக உள்ள 12,208 காவலர் பணியிடங்களை தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம்மூலம் நிரப்புமாறு நான் உத்தரவிட்டேன்.

எனது உத்தரவினையடுத்து, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், காவலர்களுக்கான எழுத்துத் தேர்வை 24–6–2012 அன்று நடத்தியது. இதனைத் தொடர்ந்து, 2012 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் உடற்தகுதித் தேர்வினை நடத்திய தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், 12–10–2012 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் பட்டியலை வெளியிட்டது. இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள 12,162 காவலர்களுக்குத் தற்போது மருத்துவப் பரிசோதனை நடைபெற்று வருகிறது. மருத்துவப் பரிசோதனைக்குப் பின், தேர்ந்தெடுக்கப்பட்ட காவலர்களுக்கு 7 மாத கால பயிற்சி அளிக்கப்பட்டு, அதன் பின்னரே அவர்கள் பணியில் சேரும் நிலை உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டும், பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப தமிழக அரசால் வகுக்கப்பட்டுள்ள அளவுகோல்களின்படி 19,096 காவல் பணியிடங்கள் கூடுதலாக உருவாக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும்; ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான காவலர்கள் ஓய்வு பெறுவதைக் கருத்தில் கொண்டும் பார்க்கும்போது, காவல் துறை ஈடுபடும் பல்வேறு நடவடிக்கைகளில் குறிப்பிட்ட சிலவற்றில் அவர்களுக்குத் துணையாக ஒரு துணைப் படையை உருவாக்குவது அவசியமாகிறது. இவ்வாறு அமைப்பதன்மூலம், சட்டம்–ஒழுங்கு பராமரித்தல், குற்றங்களைக் கட்டுப்படுத்துதல், குற்றப் புலனாய்வு போன்ற பிரதான காவல் பணிகளில் தற்போதுள்ள காவலர்களை முழுமையாக ஈடுபடுத்த இயலும்.

இதற்கு வழி செய்யும் வகையில், “தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை” என்ற ஒரு சிறப்புப் படை தமிழ்நாட்டில் உருவாக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சிறப்புப் படைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல்; நீதிமன்றங்களால் வெளியிடப்படும் வருவிப்பு ஆணைகளை சார்வு செய்தல்; கூட்ட நெரிசல்களை ஒழுங்குபடுத்துதல்; இரவு ரோந்து மற்றும் ஓட்டுநர் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையில் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு விளம்பரம் செய்யப்பட்டு; மாவட்டவாரியாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள்மூலம் தேர்வு நடத்தப்படும். பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று 18 வயது முதல் 30 வயது வரை உள்ள இளைஞர்கள் இத்தேர்வில் கலந்துகொள்ளத் தகுதியுடையவர் ஆவர். தேர்வில் வெற்றி பெறுபவர்கள் அந்தந்த மாவட்டங்களில் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உறுப்பினர்களாகப் பணி அமர்த்தப்படுவர்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உறுப்பினர்களுக்கு பயிற்சிக் காலத்திலும்; பணிக் காலத்திலும் மாதம் ஒன்றுக்கு மதிப்பூதியமாக 7,500/– ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அவர்கள் காவலர்களுக்கான சிறப்பு அங்காடிகளில் அளிக்கப்படும் வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்படுவர். இதுதவிர, அரிசி, கோதுமை, சர்க்கரை, மைதா, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மானிய விலையில் வகுக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி அவர்களுக்கு வழங்கப்படும்.

ஓர் ஆண்டுக் காலம் திருப்திகரமான பணியினை நிறைவு செய்யும் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உறுப்பினர்கள், காவல் துறையில் காலியாகும் காவலர் பணியிடங்களில் ஈர்த்துக்கொள்ளக்கூடிய தகுதியைப் பெறுவர். ஒவ்வொரு ஆண்டும் காவல் துறையில் காவலர் நிலையில் ஏற்படும் காலியிடங்களில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் இந்தச் சிறப்புக் காவல் இளைஞர் படையிலிருந்து தேர்ச்சி பெறும் நபர்களுக்கு ஒதுக்கப்படும்.

முற்பகல் 10–10

சீருடைப் பணியாளர் தேர்வாணையம் இதற்கென ஒவ்வொரு ஆண்டும் சிறப்புத் தேர்வினை நடத்தும். அத்தேர்வில் பங்கேற்று வெற்றி பெறுபவரின் பட்டியல் சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் வெளியிடப்படும். இத்தேர்வில் வெற்றி பெறாதவர்கள், 40 வயது வரை, இந்த தமிழ்நாடு சிறப்புக் காவலர் இளைஞர் படையிலேயே தொடர்ந்து பணியாற்றுவர். 40 வயதிற்கு மேல், அவர்களுக்கு தமிழக அரசே வேறு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தரும்.

இந்த நிதியாண்டில் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைக்கென மாநிலம் முழுவதும் 10,000 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இதற்கான தேர்வுகள் வரும் டிசம்பர் மாதம் நடத்தப்படும். இந்தத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் இந்த நிதியாண்டிற்குள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். 2013–2014 ஆம் நிதியாண்டில் 15,000 பேர் இந்த இளைஞர் படைக்கென தேர்ந்தெடுக்கப்படுவர். இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் தேவைக்கேற்ப 50,000 உறுப்பினர்கள் வரை இந்தத் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையில் சேர்க்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

3. தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உருவாக்குதல்–முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அமைச்சு என்பதற்கு இலக்கணமாக வள்ளுவப் பெருந்தகை சொன்னார், மக்களின் உரிமைகளும், உடைமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்; அதற்கு காவல் அரணாக இருப்பதே அமைச்சு என்று சொன்னார். தமிழ் மண்ணில்–தமிழர்களின் உரிமைகளுக்கும், உடைமைகளுக்கும் அரணாக இருந்து கொண்டிருக்கிற, ஏன் தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட காவலர்களுக்கே காவல் தெய்வமாக இருந்துகொண்டிருக்கிற நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஒரு நல்ல அறிவிப்பை விதி 110–ன்கீழ் இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதை நாம் மனமார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதிலே இரண்டு வகையிலே தமிழக மக்களுக்குப் பெருமை, நன்மை. ஒன்று, தமிழகத்திலே இருக்கின்ற படித்த, வேலையற்ற, எளிய குடும்பத்தைச் சேர்ந்த 10,000 இளைஞர்களுக்கு வேலை கிடைக்கப் போகிறது; ஒரு நல்ல கௌரவமான வேலை கிடைக்கப் போகின்றது.*